DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 406 /2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW 5(LW7)
Defence

Name : Senthilkumar

Father Name /
Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 29th April 2026.

எதிரி ஆஜர்.

முதண்மை விசாரணை

நான் தற்போது விழுப்புரம் மாவட்டம் கெடார் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 23.01.2025 அன்று நான் ஆரோவில் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 11.00 மணிக்கு ராதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று

ஆரோவில் காவல் நிலைய குற்ற எண். 36/2025 பிரிவுகள் 303(2) பிஎன்எஸ் ல் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும்.** அன்றைய தினமே வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே காலை 11.00 மணியளிவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சூரியா மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அது **முறையே அ.சா.ஆ. 3 மற்றும் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3, 6 உள்ளவர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை பதிவுசெய்தேன். வழக்கு சம்பந்தமாக எதிரியை தேடிவந்ததில் சந்தேகதத்தின் பேரில் இவ்வழக்கின் எதிரி குணசேகரன் என்கிற மீன்சேகர் என்பவரின் வீட்டிற்கு அன்றைய தினம் போலீசார் சகிதம் நான் சென்றபோது எங்களை கண்டதும் எதிரி தப்பி ஓட முயற்சி செய்தார். நான் அவரை மடக்கி பிடித்து விசாரணை செய்தபோது எதிரி சாட்சிகள் சூரியா மற்றம் முருகன் முன்னிலையில் 14.00 மணி முதல் 14.15 மணி வரை தானாக முன் வந்து எவ்வித அச்சுறத்தலும் துன்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவுசெய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி “ ---- மரஷோபாக்களை எனது வீட்டில் வைத்துள்ளதை தங்களிடம் ஆஜர் செய்வேன்” **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் அன்றைய தினம் மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் 15.30 மணிக்கு எதிரி அவர் வீட்டில் இருந்து எடுத்து ஆஜர்படுத்திய சுமார் 182 செ.மீ. நீளமும் சுமார் 82 செ.மீ. அகலமும் உள்ள மரத்தால் ஆன ஷோபா 1, சுமார் 181 செ.மீ. நீளமும் சுமார் 81 செ.மீ. அகலமும உள்ள மரத்தால் ஆன ஷோபா 1 ஆகியவைகளளை கைப்பற்றுத்ல மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். மேற்படி கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி எதிரி தக்க வழிகாவல் மூலம் நீதிமன்ற காவலில் உட்படுத்தப்பட்டார். கைப்பற்றப்பட்ட மேற்படி வழக்கு சொத்துகளை படிவம 91 மூலம் கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்ததேன். மேற்படி படிவம் **அ.சா.ஆ.7**

குறியீடு செய்யப்படுகிறது. பின்பு வழக்கை விசாரணைமுடித்து வழக்கின் எதிரி மீது 303(2) பிஎன்எஸ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்தாக சொல்லப்டும் தேதியில் இருந்து 4 நாட்கள் கழித்து புகார் கொடுக்கபட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலத்தை எந்த பெற்றதாக அந்த வாக்குமூலத்தில் குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு மடிக்கணினி எடுத்து சென்று தட்டச்சு செய்யபட்டதா என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் ஷோபாவை கட்டி வைத்திருந்ததாக சங்கிலியை கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துவிட்டு தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் எனற்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/-XXXX,

நீதித்துறை நடுவர்,
வானூர்.